<u>கம்பம் நகராட்சி</u>

**2019–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் (13.08.2019) ஆம் நாள் செவ்வாய் கிழமை முற்பகல் 11.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

<u>**கூட்டப் பொருட்கள்**</u>

| | |
|---|---|
| **1.** | மத்திய அரசின் சிறப்பு திட்டமான ஜல் சக்தி அபியான திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள தனியார் கட்டிடங்கள், அரசு கட்டிடங்கள் மற்றும் வணிக கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பேனர்கள், சுவரொட்டிகள், பிட்நோட்டீஸ் ஆட்டோ மூலம் அறிவிப்புக்கள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களில் அதற்கான சான்றுகளுடன் கூடிய பசையொட்டிகள் (ஸ்டிக்கர்) ஒட்டுவதற்கான உத்தேச செலவினம் ரூ. 3,00,000/–ற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2155/2019/எப்1) |
| **2.** | சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அலுவலக 08.08.2019 ம் தேதிய தொலை பேசியில் தெரிவித்துள்ளதன்படி, தேனி மாவட்டம், கம்பம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு திட்டம் 2019/20 ன் கீழ் ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.3 எல்.எப் ரோடு குறுக்கு தெரு விரிவாக்கப் பகுதி, வார்டு எண் 31 காந்தி நகர் விரிவாக்கப்பகுதி, வார்டு எண். 29 மஞ்சக்குளம் சாலை விரிவாக்கப்பகுதி, வார்டு எண் 01 விவேகானந்தர் தெரு விரிவாக்கப்பகுதிகளில் புதிதாக தார்சாலை அமைக்கும் பணி மற்றும் வார்டு எண். 31 காந்திநகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 200.00 |
| 2 | வார்டு எண் . 28 வி.எம். சாவடி தெரு (பிந்து நகர்) விரிவாக்கப்பகுதி. வார்டு எண் . 33 முத்துராமலிங்கம் நகர் விரிவாக்கப்பகுதி, வார்டு எண். 19, காளவாசல் தெரு விரிவாக்கப்பகுதி, வார்டு எண் 31 எல். எப். ரோடு விரிவாக்கப்பகுதிகளில் புதிதாக தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண் . 19 காளவாசல் குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்தல் சிறுபாலங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 200.00 |
| 3 | வார்டு எண் .29 ரேஞ்சர் ஆபிஸ் ரோடு குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி, வார்டு எண். 28 சுருளிப்பட்டி குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி, வார்டு எண். 11 கம்பம்மெட்டு காலனி விரிவாக்கப்பகுதி. வார்டு எண். 31 சி.எம்.எஸ் நகர் மெயின் மற்றும் குறுக்கு தெருவில் புதிதாக தார்சாலை அமைக்கும் பணி மற்றும் வார்டு எண். 11 கம்பம்மெட்டு காலனியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 200.00 |

| | | | |
|---|---|---|---|
| | 4 | வார்டு எண் . 03 குரங்குமாயன் தெரு விரிவாக்கப்பகுதி, வார்டு எண்.09 சுப்பிரமணியசாமி கோவில் தெரு விரிவாக்கப்பகுதி, வார்டு எண்.31 கக்கன்காலனி விரிவாக்கப்பகுதி, வார்டு எண் 04 கே.கே. பட்டி ரோடு விரிவாக்கப்பகுதியில் புதிதாக தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.09 சுப்பிரமணியசாமி கோவில் தெரு மற்றும் குரங்குமாயன் தெரு குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 200.00 |
| | 5 | வார்டு எண்.31 நந்தகோபால் நகர் குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதி மற்றும் வார்டு எண் 04 மாலையம்மாள் புரம் குறுக்கு தெரு விரிவாக்கப்பகுதியில் புதிதாக தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.31 நந்தகோபால் நகர் மெயின் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 200.00 |
| | | மொத்தம் | **1000.00** |

மேற்கண்டுள்ளவாறு ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் புதிதாக தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். |
| 3. | இந்நகராட்சிக்கு சொந்தமான பெண்கள் உயர்நிலைப்பள்ளி தரம் உயர்த்தப்பட்டதால் வகுப்பு அறை பற்றாக்குறையாக உள்ளதால் கூடுதல் வகுப்பறை அமைத்து கொடுத்திட வேண்டுமாறு தலைமை ஆசிரியர், நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி அவர்கள் கோரியுள்ளதன்படி, அதே வளாகத்தில் உள்ள வடமேற்கு அறையின் மேல் பகுதியில் 11எ, 11பி வகுப்புகளுக்கு இரு வகுப்பறைகள் அமைத்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 9.80 இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) செலவினத்தில் கல்வி நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு** : – மன்றம் அனுமதிக்கலாம். |
| 4. | கம்பம் நகர் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காக நகராட்சி பகுதிகளில் உள்ள பள்ளி மாணவர்கள், அங்கன்வாடி குழந்தைகள், இந்நகரின் குடிசைப்பகுதிகள் மற்றும் காய்ச்சல் ஏற்படும் பகுதிகளில் நிலவேம்பு குடிநீர் வழங்குவதற்காக அரசு அங்கீகாரம் பெற்று நிறுவனமான TAMPCOL நிறுவனத்திடம் 200 கிலோ நிலவேம்பு குடிநீர் சூரணம் வாங்குவதற்கு அனுமதியும், அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.1,00,000/– க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார பிரிவு அவசர அவசியம் கருதியும், ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1052/2019/எச்1) |

| | |
|---|---|
| 5. | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு வீடுவீடாக சென்று புகைமருந்து அடிக்கப்பட்டு வருகிறது. தற்போது நான்கு மிஷினில், ஒரு மிஷின் மட்டுமே நல்ல நிலையில் இயங்கி வருகிறது. தற்போது மழைக்காலம் தொடங்கி டெங்கு காய்ச்சல் அதிகமாக பரவி வருவதால் வீடுவீடாக சென்று புகை மருந்து அடிக்கும் பணி துவங்க இருப்பதால் மேற்காணும் 3 எண்ணம் புகை தெளிப்பான்களை (Handy Fogging Machine) பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 60,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி, நோய்தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும், தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். |

ஒப்பம்/– திருமதி. இ. செல்வராணி,
ஆணையாளர்(பொ) மற்றும் தனி.அதிகாரி,
கம்பம் நகராட்சி.

நாள். 13.08. 2019
இடம். கம்பம்